மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ரேசன் கார்டுகள் விநியோகம்.

* 8615 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதிதாக ரேசன் கார்டுகள் விநியோகம் செய்யக் கூடாதென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது உண்மைதானா ?

(ஆ) அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ); புது குடும்ப அட்டைகளை வழங்கலாம் என தற்போது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புது குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்றால், இடைக் காலங்களிலே எத்தனை மாதங்களாக இந்தக் குடும்ப அட்டைகள் கொடுக்கக்கூடாது என்று ஏதாவது ஆணை பிறப்பிக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் புதிதாக வழங்க வேண்டாமென்று எப்போதும் ஆணை பிறப்பிக்கப்படவில்லை. 16-3-1990-ஆம் நாளன்று புதிய குடும்ப அட்டைகள் உரிய சோதனைக்குப் பின்னால் வழங்க வேண்டுமென்று அரசின் சார்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதிலே, இதுவரையிலே 1-1-1990 முதல் ஜூலை மாதம் இறுதி வரையிலே வரப்பெற்ற மனுக்கள் 51,171 ஆகும். இவை பரிசீலிக்கப்பட்டு, 27,905 புதிய அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஜூலை மாதம் மட்டும், 9,672 குடும்ப அட்டைகள் புதிதாக வழங்கப்பட்டிருக்கின்றன

[1990 ஆகஸ்ட் 23

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து குடும்பக் கார்டுகள் கொடுப்பதிலே ஒன்றும் தடை விதிக்கவில்லை என்பதாகச் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இருந்தாலும் கூட, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் மழை இல்லாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஏராளமான மனுக்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன தாலுக்கா தலைநகரங்களிலே. ஆகையினால், இன்னொரு அதிகாரியையாவது நியமித்து, விரைவிலே குடும்பக் கார்டுகள் கொடுத்தால்தான், அவர்கள் ரேஷன் கடையிலே சென்று அரிசி வாங்குவதற்கோ, அல்லது இதரப் பொருட்கள் வாங்குவதற்கோ சரியாக இருக்கும். மேலும் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு, உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவில், இன்னொரு அதிகாரியையும் நியமித்து, குடும்பக் கார்டுகளை விரைவிலேயே—இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள்ளாகக்கொடுப்பதற்கான ஒரு முயற்சியினை எடுத்துக் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய குடும்ப அட்டைகள் வழங்குவது என்பது ஒரு காலக் கெடுக்குள் முடிந்து விடக்கூடிய பிரச்சினை அல்ல. அது ஒரு தொடர் பிரச்சினை என்கிற காரணத்தினாலே, வரப்பெற்ற மனுக்கள் எல்லாம் உரிய முறையிலே பரிசீலிக்கப்பட்டு உடனுக்குடன் அட்டைகள் வழங்கப்படுகின்றன மாண்புமிகு உறுப்பினரவர்கள் இன்னும் விரைவுப்படுத்தப்பட வேண்டுமென்கிற ஆலோசனையை ஏற்று இந்த அரசு செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கார்டுகள் வழங்குவதற்குப் பதிலாக, ஏற்கெனவே கார்டுகள் தவறி அல்லது நியாய விலைக் கடைகளை நடத்துகிறவர்களே கார்டுகளை வைத்துக் கொண்டு, அவ்வாறு குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்காமல் இருக்கிற குறை அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்டவர்களுக்கு புதிதாக கார்டுகள் வழங்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இரண்டாவது, ஏற்கெனவே அரசு அறிவித்தபடி, நியாய விலைக் கடைகளில் 800 குடும்ப அட்டைகளுக்கு மேலாக இருந்தால், கடைகள் பிரிக்கப்படும் என்று உள்ளது. தற்போது 1,200 கார்டுகளுக்கு மேலாக இருந்தால்தான் பிரிக்கப்படும் என்ற உத்தரவு வந்திருப்பதாக அறிகிறேன். தயவுசெய்து, பல கிராமங்களைச் சார்ந்தவர்களுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்று இருக்கிற காரணத்தினாலே, பழையபடி 800 கார்டுகள் உள்ள.....

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருவருக்கு ஒரு கேள்வி தானே, உங்களுக்குக் கூட அளப்பதாகத் தவறாகச் சொல் கிறார்கள் (சிரிப்பு) ஒரே மாவட்டம் என்பதால் அளக்கிறீர்களோ?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளில் போலி அட்டைகள் இருப்பதை இந்த அரசு அறிந்துதான் போலி அட்டைகளை முதலில் கைப்பற்றுவதற்காக பல்வேறு முயற்சி களை எடுத்து, பல்லாயிரக்கணக்கான போலி அட்டைகள்—குடும்ப அட்டைகள்—இந்த அரசு கைப்பற்றி இருக்கிறது. அதே சமயத்தில், உண்மையாக குடும்ப அட்டைகள் வேண்டு மென மனுச் செய்தவர்களுக்கு உடனுக்குடன் கொடுப்பதற்கான ஏற்பாட்டையும் இந்த அரசு செய்திருக்கிறது. அடுத்த கட்ட மாக, 800 குடும்ப அட்டைகளுக்கு தனியாக புதிய நியாய விலைக் கடைகள் உருவாக்கப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கை யாக இருந்தாலும், முதல் கட்டமாக 1,200 குடும்ப அட்டைகள் இருந்தால் அந்தக் கடைகள் பிரிக்கப்பட்டு முதல் கட்டமாக இயங்கும். படிப்படியாக அது 800 அட்டைகள் வரையிலும் வந்து புதிய கடைகள் திறக்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

9–20 மணி

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடைகளுக்கு நீண்ட தூரம் சென்று பொருட்கள் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அது போக நீண்ட தூரத்தில் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள கடைகளைப் பிரித்து அமைக்கின்ற திட்டம் அரசிடம் உண்டா என அறிய விரும்புகிறேன்.?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட தூரம் கிராமங்கள் பரவியிருக்குமானால் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் இருக்கக்கூடிய ஊர்களுக்கு பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்கலாம் என்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், மாவட்ட வழங்கல் அதிகாரி அவர்களுக்கும் அரசு ஆலோசனை கூறியிருக்கிறது. அந்தந்த நிலைமைகளுக்கு ஏற்பவும் மாவட்டத்திலுள்ள அதிகாரிகள் மக்களின் வேண்டுகோ ளுக்கு ஏற்பவும் அரசு விடுத்து இருக்கின்ற நிபந்தனைகளின் அடிப்படையில் புதிய பகுதி நேரக் கடைகள் திறப்பதற்கான வாய்ப்பு உண்டு.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு

TRUTH ALONE TRIUMPHS

நபர் ரேஷன் கார்டுகள் பறிமுதல் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா ? கணவன் இறந்து விட்டால் மனைவிக்கு ரேஷன் கார்டு வேண்டும் என்பதை உணர்ந்து அவர்களுக்கு ரேஷன் கார்டு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். உண்மையாக குடும்ப அட்டைகள் வேண்டுமென்று யார் மனுச் செய்தாலும் அவர்களுடைய நியாயங்கள் பரிசீலிக்கப்பட்டு நிச்சயமாக குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடும்ப அட்டைகள் கொடுப்பது இல்லை என்ற உத்தரவு இருப்பதாகச் சொன்னார்கள். கோவை மாவட்டத்தில் அநேகமாக பல்லாயிரக்கணக்கான போலி கார்டுகள் 12 ஆயிரம் வரைக்கும் பிடிக்கப்பட்டும் ; அதேபோல் 15 ஆயிரத்திற்கு மேல் புதிய ரேஷன் கார்டுகள் வேண்டுமென்று விண்ணப்பித்தும் இன்று வரையிலும் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை அவருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அந்த அட்டைகள் உடனடியாக வழங்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கோவை மாவட்டத்தில் 5,041 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து எத்தனை தவறான குடும்ப அட்டைகள் இருக்கிறதோ அதற்கு சரி நிகர் சமமாக புதிய அட்டைகள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை நியாயத்தின் அடிப்படையில் அமைந்த கோரிக்கை அல்ல. தவறான அட்டைகளை கைப்பற்றுவது அரசாங்கத்தின் கடமை, தேவையின் அடிப்படையில், நியாயத்தின் அடிப்படையில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கவேண்டும் என்பதுதான் நியாயமாகும்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் வழங்குவது சம்பந்தமாக எந்த முறையில் அந்த மனு கொடுக்க வேண்டும் என்ற நடைமுறையை குறிப்பாகச் சொல்வார்களானால் அந்த முறையில் அந்த மனுவைக் கொடுக்கலாம். பரிசீலித்து அட்டைகள் வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும். புரியாத மக்களுக்கு புரியும்படியாக நமது அரசு செயல்படுமா என அறிய விரும்புகிறேன்.

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டல், வழங்கல் அதிகாரியிடம் மனு செய்யவேண்டும். இங்கே நான் குறிப்பிடுகின்ற நாலு வகைப்பட்டவர்களுக்கு புதிதாக குடும்ப அட்டைகள் வழங்கப்படும். (1) பிற மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலிருந்து இடம் மாறி வருபவர்களுக்கு அவர்கள் முன்பு தாங்கள் வசித்து வந்த இடத்திலிருந்து ஒப்பளித்தல் சான்றிதழ், சரண்டர் சர்ட்டிபிகேட் பெற்று வந்து கொடுத்தால் அவர்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும். (2) திருமணம் ஆகி புதிய குடும்பங்கள் அமைப்போருக்கு நீக்க சான்றிதழ், டெலிஷன் சர்டிபிகேட் அளிக்கும்பட்சத்தில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும். புதிய அட்டைகள் வழங்கும் முன் அவர்கள் தனிக் குடும்பமாக வசிக்கிறார்களா என்பது உறுதி செய்யப்படும். (3) முன்பு பெறப்பட்ட குடும்ப அட்டைகளை தொலைத்தவர்களும், பழுதுபட்ட அட்டைகளை வைத்து இருப்பவர்களும் அவர்களுடைய உறுதிமொழி ஒன்று பெற்று 'ஏ' ரிஜிஸ்தரிலிருந்து அவர்களுடைய பெயரை நீக்கி பின் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும். (4) இதுவரை குடும்ப அட்டைகள் பெறாதவர்களுக்கு 100 சதவீத விசாரணைக்குப் பின் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

9-25 மணி

இதுவரை குடும்ப அட்டைகள் பெறாததற்கான காரணங்கள், வாக்காளர் பட்டியலில் அவர்கள் பெயர் இடம் பெற்றுள்ளதா, குறிப்பிட்டுள்ள விலாசத்தில் அவர்கள் வசிக்கிறார்களா போன்ற விவரங்கள் சரிபார்க்கப்பட்ட பின் அவர்களுக்குப் புதிய அட்டைகள் வழங்கப்படும்.

சென்னை மாநகரத்தில் உதவி உணவுப் பொருள் வழங்குதுறை ஆணையாளர்களாலும் மாவட்டங்களில் மாவட்ட வழங்கல் அதிகாரியும் வட்ட வழங்கல் அதிகாரிகளின் பரிந்துரைகளின் பேரில் புதிய குடும்ப அட்டைகள் வழங்குகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ரேஷன் கார்டு என்பது மக்களுக்கு மிக முக்கியமான கருவியாக இருந்துகொண்டு இருக்கிறது. அதற்குக் காரணம், இன்றைக்கு 300 ரூபாய்க்கு கீழே வருமானம் உள்ள கார்டு வைத்திருந்தால் அவர்களுக்கு அரசின் ஐ.ஆர்.டி.பி. லோன் வாங்குவதற்கு உபயோகப்படுத்த முடியும். ஆகவே, இந்தப் புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் போட்டு இருப்பவர்களுக்கு இன்றைக்கும் கார்டு கிடையாது.

அவர்களுக்குப் புதிய கார்டு புதுப்பிக்கக்கூடிய முறையும் இல்லை. அவர்களில் எத்தனையோ பேர் தாலுக்கா அலுவலகங்களில், ஒவ்வொரு அலுவலகத்திலும், 200, 300 பேர் மனு செய்தும் கார்டு கிடைக்காமல் இருக்கிறார்கள். அவைகளை உடனடியாக விசாரணை செய்து, அதற்கென தனி அதிகாரிகளைப் போட்டு விசாரித்து அவர்களுக்குக் கார்டுகள் கொடுத்தால் அந்த லோன் பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும். அதோடு இந்த 800 கார்டு என்பதை......(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் கூறி இருக்கிறேன். ஏற்கெனவே இருக்கக்கூடிய வட்ட வழங்கல் அதிகாரிக்கு இதிலே வேலைப்பளு அதிகமாக இருக்குமேயானால்தான் இன்னொரு அதிகாரியை அதிகப்படுத்தி அந்த வேலையை அவர்களைப் பார்க்கச் செய்யலாம். ஆனால் இப்போது இருக்கக்கூடிய வட்ட வழங்கள் அதிகாரிகளே இதைச் சரிபார்த்து, அட்டைகள் வழங்குவதற்கான அனைத்து வாய்ப்புகளும் இருக்கிற காரணத்தினாலே, வட்ட வழங்கல் அதிகாரி, மாவட்ட வழங்கல் அதிகாரிக்குத் துணையாக வேறு அதிகாரிகள் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது தனிப்பட்ட முறையிலே அப்படி குறைபாடுகள் இருக்குமேயானால், என்னிடம் கொடுத்தால் உடனடியாக அதற்குத் தீர்வு காணப்படும்.

மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

*2244—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடியில் மட்டும் வசிக்கும் பண்ணையார் என்ற சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தூத்துக்குடியில் வசிக்கும் பண்ணையார் சமூகத்தை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரத்திலே ஒரு பகுதியி